# லண்டனில் நடைபெற்ற பிரிகேடியர்

பிரிகேடியர் பால்றாஜ் அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவாகவும், பிரிகேடியர் சொர்ணம் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவாகவும், மே மாதத்தில் வீரச்சாவை தழுவிக்கொண்ட அனைத்து மாவீரர்களுக்காகவும் 23-05-2010 லண்டனில் வணக்க நிகழ்வு இடம்பெற்றது.

வடமேற்கு லண்டனில் உள்ள ரைய்சிலிப் பகுதியில் உள்ள ஹவாட் ஹவுஸ் மண்டபத்தில் இந்த நினைவு வணக்க நிகழ்வு நடைபெற்றது. 23-05-2010 ஞாயிறு மாலை 8:00மணிக்கு ஆரம்பமான இந்த நினைவுவணக்க நிகழ்வில் முன்னாள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், தற்போதய நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் உறுப்பினருமான திரு. சேனாதிராஜா ஜெயானந்தமூர்த்தி அவர்கள் ஈகைச்சுடரினை ஏற்றி பிரிகேடியர் பால்றாஜ் அவர்களின் நினைவுருவப்படத்திற்கு மலர்மாலையினை அணிவித்தார்.

அதனைத்தொடர்ந்து லெப்ரினன் கேணல் சிரித்திரனின் சகோதரியான சிவமலர் கோகேஸ்வரன் அவர்கள் பிரிகேடியர் சொர்ணம் அவர்களின் நினைவுருவப் படத்திற்கு மலர்மாலையினை அணிவித்தார்.

நிகழ்வில் கவிஞர் ராஜமனோகரன் அவர்களின் உரையும், நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரித்தானிய பிரதிநிதி திரு. ஜெயானந்தமூர்த்தி அவர்களின் உரையும் இடம்பெற்றது. அத்தோடு பிரிகேடியர் பால்றாஜ் நினைவுப் பாடலும், கவிதைகளும் இடம்பெற்றன. பிரித்தானிய ஐக்கிய செயற்பாட்டுக் குழுவினால் ஒழுங்குசெய்யப்பட்ட இந்த நினைவுவணக்க நிகழ்வில் பெருமளவான மக்கள் வந்து கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.









